**செய்தி வெளியீடு எண்: 290** **நாள்: 30.04.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் கோயம்புத்தூர் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரி இணைந்து ஜவுளி தொழில் முனைவோர்க்கு உதவ பல்வேறு தொழில்நுட்ப உட்பிரிவுகளில் ஜவுளி பயிற்சிபட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக இண்டஸ்ட்ரியல் / பேக்கேஜிங் டெக்ஸ்டைல்ஸ் பயிற்சி பட்டறை வரும் 03.05.2018 முதல் 06.05.2018 வரை நடைபெறவுள்ளது.

இப்பட்டறையில் தயாரிப்பு முறை, தொழில்நுட்பம், இயந்திரங்கள், தரநிலைகள், சந்தைத்தேவைகள், சந்தைப்படுத்துதல் முதலிய தலைப்புகளில் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும் பங்கேற்பாளர்கள் தொழிற்சாலைகளை பார்வையிட ஏற்பாடு செய்யப்படும் பங்கேற்பாளரிடம் துறை சார்ந்த கேள்வித் தொகுப்புகள் வழங்கப்பட்டு தொழிற்சாலைகள், விநியோகஸ்தர்கள் மற்றும் பயனாளிகளிடம் கள ஆய்வு செய்ய பயிற்று விற்கப்படுவார்கள்.

புதிய பொருட்கள் உற்பத்தி, SWOT ஆராய்ச்சி புதிய வியாபாரரததில் நுழைவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும் அடுத்த பயிற்சிகளில் Agro Tech / Home Tech அதன் உட்பிரிவுகள் சார்ந்தபட்டறைகள் நடைபெறும்.

பல்வேறு தொழிற்சாலைகள் ஆராய்ச்சி நிறுவனங்கள் உயர்கல்வி நிலையங்களிலிருந்து தொழிலதிபர்கள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்கள் அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

இந்த நான்கு நாட்கள் பட்டறை தமிழ்நாடு அரசின் உதவி தொகையால் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் பயிற்சி கையேடு மற்றும் உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டெக்னிக்கல் டெக்ஸ்டைல்ஸ் துறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் மற்றும் தொழிலதிபராக ஆவதற்கும் இப்பயிற்சிகள் பயன்படும்.

**Key Points:**

- **Programme Date: 03.05.2018 to 06.05.2018**
- **Maximum No. of Participants: 50**
- **Target Participants: Existing and Budding Entrepreneurs in Industrial & Packaging Field**
- **No Registration Fee (Sponsored by State Government)**
- **Venue: SARDAR VALLABHBHAI PATEL INTERNATIONAL SCHOOL OF TEXTILES AND MANAGEMENT,1483, Avinashi Road, Peelamedu, Coimbatore- 641004, 0422-2571675, 2592205**
- **Contact: 8870479671/9791903909**
- **For application: www.svpistm.ac.in**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**